04.02.2026

O.S.No. 205/2024

PW2– ஆறுமுகம் – த/பெ. சுப்பையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 2ம் பிரதிவாதி தரப்பில்)

1. நான் சொல்வதுபோல் வாதியின் வீட்டிற்கு மேல்பக்கம் 2 அடி அளவில் முடுக்கு எதுவும் விடாமல் வழக்கிற்காக முடுக்கு விட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வீட்டின் மேல்பக்க ஜன்னலை அடைக்க 2ம் பிரதிவாதி வாதியை ஒருபோதும் மிரட்டியதும் கிடையாது கண்டித்ததும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

2. வழக்கிற்கு முன்பு பிராது தபசில் சொத்தை 2ம் பிரதிவாதி காவல்துறையினர் உதவியுடன் சர்வேயர் வைத்து அளந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வீடு கட்டியுள்ளார், வாதியின் இடத்தில கட்டவில்லை, நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. 2ம் பிரதிவாதி தற்காலிகமாக வாதியின் இடத்தில் தகரங்கள் அமைக்கவில்லை என்றாலும், இல்லாத தகரத்தை உள்ளது என பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில்தான் வீடுகட்டியுள்ளார் என்றும், அவர் வாதியின் இடத்தில் வீடுகட்டவில்லை என்றால் சரியல்ல.

4. 2ம் பிரதிவாதிக்கு எதிராக நான் கோரியுள்ள விளம்புகை, சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி, வாதியின் மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, 2ம் பிரதிவாதி 3 அடி இடத்தை ஆக்கிரமித்துள்ளார். வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி